புதுச்சேரி அரசு
துணைநிலை ஆளுநர் செயலகம்

**No. LGS/PRO/2021** **28 ஜூலை, 2021**

# பத்திரிகை செய்தி

22-வது வாராந்திர கோவிட் மேலாண்மை சீராய்வுக் கூட்டம் இன்று(28-07-2021) துணைநிலை ஆளுநர் மாளிகையில் நடைபெற்றது. மாண்புமிகு துணைநிலை ஆளுநர் டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்.

மாநில சுகாதார இயக்க திட்ட இயக்குநர் டாக்டர் ஸ்ரீராமலு புதுச்சேரியில் கொரோனா நிலவரம், மூன்றாவது அலையை எதிர்கொள்ள எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள், தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ள விகிதம், குழந்தைகளுக்கான கொரோனா சிகிச்சை ஆகியவை குறித்து படக் காட்சி மூலம் விளக்கினார்.

தலைமைச் செயலர் அஸ்வனி குமார், கூடுதல் காவல் துறை இயக்குனர் திரு ஆனந்த மோகன், வருவாய்த்துறைச் செயலர் திரு அஷேக் குமார், உள்ளாட்சித்துறைச் செயலர் திரு. வல்லவன், சுகாதாரத்துறைச் செயலர் டாக்டர். அருண், துணைநிலை ஆளுநரின் செயலர் திரு அபிஜித் விஜய் சௌதரி மாநில கோவிட் மேலாண்மை பொறுப்பதிகாரி டாக்டர் ரமேஷ், உலக சுகாதார நிறுவனத்தின் பிரதிநிதி டாக்டர் சாயரா பானு, ஜிப்மர் மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரிகளின் அதிகாரிகள்/பிரதிநிதிகள் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.